ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | நாணயத் திணைக்களம் |
| திகதி | 2018.11.27 |

## புதிய சுற்றோட்ட நியம நாணயக் குத்தித் தொடரொன்று வெளியிடப்படுகின்றது

இலங்கை மத்திய வங்கி, நாணயக் குத்திகளின் வார்ப்புச் செலவினைக் குறைத்தல், நாணயக் குத்திகளின் பாவனைக் காலத்தினை அதிகரித்தல், இலகுவாக எடுத்துச் செல்லக்கூடிய தன்மையினை வழங்கல், கட்புல ரீதியாக பாதிக்கப்பட்ட மக்கள் இலகுவாக அடையாளம் காணக்கூடிய தன்மையை வழங்கி ஆகியவற்றின் குறிக்கோள்களுடன் ரூ.10, ரூ.5, ரூ.2, ரூ.1 ஆகிய முகப்புப் பெறுமதியில் புதிய நாணயக் குத்தித் தொடரை சுற்றோட்டத்திற்கு விட்டிருக்கின்றது. முதலாவது நாணயக் குத்திகளைக் கொண்ட பொதி உத்தியோக பூர்வமாக மாண்புமிகு பிரதம மந்திரியும் நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமான திரு. மஹிந்த ராஜபக்ஷ அவர்களிடம் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி அவர்களினால் 2018 நவெம்பர் 27ஆம் நாளன்று கையளிக்கப்பட்டது.

நாணயக் குத்திகள் 2018 திசெம்பர் 3ஆம் நாளிலிருந்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினூடாக சுற்றோட்டத்திற்கு விடப்படும். இப்புதிய நாணயக் குத்திகள் ஏற்கனவே வெளியிடப்பட்ட இதே நாணய இனக்குத்திகளுடன் சேர்ந்து சுற்றோட்டத்திலிருக்கும்.

### புதிய நாணயக் குத்தித் தொடர்களின் பண்புகள்

புதிய தொடரின் அனைத்து நான்கு நாணய இன குத்திகளும் மற்றைய உலோகங்களுடன் ஒப்பிடுகையில் செலவு குறைந்த கறைபடியாத உருக்கினால் வார்க்கப்பட்டுள்ள முலாமிடப்பட்ட நாணயக் குத்திகளைவிட கூடுதலான காலம் பாவிக்கப்படக்கூடியதாகவும் இருக்கும். நாணயக் குத்திகளின் விட்டமும் தடிப்பும் முன்னேற்றகரமான மாதிரியினைப் பேணுவதற்காக மீள அளவுபடுத்தப்பட்டுள்ளதுடன் நாணயக் குத்திகளின் நிறை கூடுதலான அளவினை எடுத்துச் செல்லும் விதத்தில் குறைக்கப்பட்டிருக்கின்றது. மேலும், கட்புலன் பாதிக்கப்பட்ட மக்களும் நாணயக் குத்திகளை இலகுவாக அடையாளம் காணும் வித்தில் வேறுபட்ட ஓரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**நாணயக் குத்திகளின் விபரம்**

| நாணய இனம் | உலோகம் | விட்டம் | தடிப்பு | வடிவம் | ஓரம் |
|---|---|---|---|---|---|
| ரூ.10 | கறைபடியாத உருக்கு | 26.4 மி.மீ | 1.80 மி.மீ | வட்டம் | 11 கோணங்கள் |
| ரூ.5 | கறைபடியாத உருக்கு | 23.5 மி.மீ | 1.80 மி.மீ | வட்டம் | கிரமமான இடைவெளிகளுடன் ஓரம் வெட்டப்பட்டது |
| ரூ.2 | கறைபடியாத உருக்கு | 22.0 மி.மீ | 1.75 மி.மீ | வட்டம் | “V” போன்ற வடிவத்தில் வெட்டப்பட்டது |
| ரூ.1 | கறைபடியாத உருக்கு | 20.0 மி.மீ | 1.75 மி.மீ | வட்டம் | இடையிடையே வெட்டப்பட்டது |

**நாணயக் குத்திகளின் முன்பக்கம்**

நாணயக் குத்திகள் பொதுவாக, முன்பக்கத்தில் இலங்கை படைக்கலச் சின்னத்தினை எடுத்துக்காட்டும் வடிவத்தினையும் நாணயக் குத்தியின் ஓரத்தில் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் ஸ்ரீ லங்கா என்னும் சொல்லையும் தாங்கியிருக்கின்றன. ஆண்டு 2017 நாணயக் குத்திகளின் அடியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**நாணயக் குத்திகளின் பின்பக்கம்**

நாணயக் குத்திகளின் பின்பக்கம் பெரிய இலக்கங்களில் நாணயக் குத்தியின் முகப்புப் பெறுமதியினையும் நாணயக் குத்தியின் மத்தியில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அதன் பெறுமதியினை சொற்களிலும் எடுத்துக்காட்டுகின்றது. தாமரை இதழ்களைக் கொண்ட அலங்காரம் நாணயக் குத்திகளின் ஓரமாக வட்டவடிவில் காணப்படுகின்றது.

| நாணய இனம் | ரூ.1 | ரூ.2 | ரூ.5 | ரூ.10 |
|---|---|---|---|---|
| முன்பக்கம் |   |   |   |   |
| பின்பக்கம் |   |   |   |   |

மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து பின்வரும் தொலைபேசிகளில் தொடர்புகொள்ளவும் :-

இலங்கை மத்திய வங்கி : தொலைபேசி : 0112477587/ 0112477369

மின்னஞ்சல் : currency@cbsl.lk

கண்காணிப்பாளர்
நாணயத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30 சனாதிபதி மாவத்தை
கொழும்பு 01
இலங்கை